நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

## அவசரக்கூட்டம் 22/07/2020, புதன்கிழமை காலை 11.00 மணிக்கு

**பொருள் எண்.1**

நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், உதகமண்டலம் அவர்களின் கடிதத்தின்படி இந்நகராட்சிக்கு உட்பட்ட பந்தலூர் பஜார் பேருந்து நிலைய வளாகத்தில் 15x10=150 சதுர அடியில் மாத வாடகை அடிப்படையில் ஆவின் பாலகம் அமைக்க இடம் கோரியுள்ளார். பொதுப்பணித்துறை செயற்பொறியாளர், கட்டிட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டம், உதகமண்டலம் அவர்களின் 25/06/2020 ஆம் நாளிட்ட கடித எண்.இவஅ2/கோ.673/28M/2020–ல் மேற்படி இடத்தில் கட்டிடம் இருந்தால் மட்டுமே வாடகை நிர்ணயம் செய்ய இயலும் என்று தெரிவித்துள்ளார். எனவே இந்நகராட்சி பேருந்து நிலையமானது A மண்டலத்தில் வருவதால் காலியிடத்திற்கு ஒரு சதுர அடிக்கு ரூ.1.80/– வாடகை மதிப்பு ஆகும். அதன் அடிப்படையில் வாடகை மாதம் ஒன்றுக்கு ரூ.1176/– (கணக்கிட்டுதாளின்படி) நிர்ணயம் செய்து அதற்குறிய வைப்புத்தொகையுடன் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

22/7/2020
தனி அலுவலர்
நெல்லியாளம் நகராட்சி

நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

## சாதாரணக்கூட்டம் 31/07/2020, வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு

**பொருள் எண்.1**

நெல்லியாளம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN43Z4515 வாகனத்திற்கு வருடாந்திர தகுதிச்சான்று பெறும் பணிக்கு 08/07/2020 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | Friends Auto Garage, Pandalur | 38500/– |
| 2 | SRK Auto Garage, Gudalur | 37400/– |
| 3 | Sree Lakshmi Auto Garage | 36500/– |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Sree Lakshmi Auto Garage நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு மற்றும் பட்டியல் தொகை வழங்க அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்கு சொந்தமான TN43Y0513 எண் கொண்ட நகர்மன்ற தலைவரின் பௌிரோ வாகனத்திற்கு புதியதாக நான்கு டயர்கள் வாங்க 07/07/2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | எம்.ஆர்.எப் டயர்ஸ், கூடலூர் | 32825/– |
| 2 | பாலகிருஷ்ணா டயர்ஸ், கோயம்புத்தூர் | 33225/– |
| 3 | ராஜாலி டயர்ஸ், கோயம்புத்தூர் | 33625/– |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள எம்.ஆர்.எப் டயர்ஸ், கூடலூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.3**

நெல்லியாளம் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN4Y8897 வாகனத்திற்கு வருடாந்திர தகுதிச்சான்று பெறும் பணிக்கு 08/07/2020 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | Friends Auto Garage, Pandalur | 18650/– |
| 2 | SRK Auto Garage, Gudalur | 18850/– |
| 3 | Sree Lakshmi Auto Garage | 18300/– |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Sree Lakshmi Auto Garage நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு மற்றும் பட்டியல் தொகை வழங்க அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.4**

நெல்லியாளம் நகராட்சியில் குடிநீர் விநியோக உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வில் 31/05/2019–ல் ஓய்வு பெற்ற திரு.தா.அறிவழகன் என்பவருக்கு அரசாணை எண்.42 நிதி (ஓய்வூதியம்) துறை நாள்.15/09/2000–ன்படி சிறப்பு சேமநலநிதி நகராட்சியின் மான்யம் ரூ.10000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.886/2020/அ2)

**பொருள் எண்.5**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்து வரும் மின் மோட்டார்கள் பழுது அடைந்துள்ளதால் குடிநீர் அவசரம், அவசியம் கருதி கீழ்கண்ட மின்மோட்டார்கள் பழுது நீக்கம் செய்ய பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | இடத்தின் பெயர்/வேலை | விலைப்புள்ளி அளித்தவர் பெயர் / தொகை | | |
|---|---|---|---|---|
| | | ரஹிமான் எலக்ட்ரிக்கல்ஸ் | வெஸ்டன் எலக்ட்ரிக்ல்ஸ் | ஜபார் எலக்ட்ரிக்கல்ஸ் |
| 1 | உப்பட்டி புஞ்சவயல் | 19000.00 | 19980.00 | 19990.00 |
| 2 | அத்திகுன்னா மட்டம் | 19000.00 | 19980.00 | 19990.00 |
| 3 | அத்திமாநகர் | 19000.00 | 19980.00 | 19990.00 |
| 4 | ஒலிமடா ராசையா காலணி | 19750.00 | 19800.00 | 19850.00 |
| 5 | தொண்டியாளம் | 19750.00 | 19800.00 | 19850.00 |
| 6 | பெருங்கரை | 19000.00 | 19980.00 | 19990.00 |
| **மொத்தம்** | | **115500.00** | **119520.00** | **119660.00** |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ரஹிமான் எலக்ட்ரிக்கல்ஸ் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.6**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பந்தலூர் பகுதியில் நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அம்மா உணவகத்திற்கு 01/04/2020 முதல் 31/06/2020 முடிய மூன்று மாதங்களுக்கு திருமதி.M.கமருன்னிசா MAR காய்கறி வியாபாரம், பந்தலூர் என்பவரிடமிருந்து காய்கறிகள் பெறப்பட்டு வந்தது. தற்போது கோவிட்–19 உள்ளதால் மற்ற எவரிடமும் விலைப்புள்ளி கோர முடியாத சூழ்நிலை என்பதால் மேலும் 01/07/2020 முதல் 30/09/2020 முடிய மூன்று மாதங்களுக்கு திருமதி.M.கமருன்னிசா MAR காய்கறி வியாபாரம், பந்தலூர் அவர்கள் மூலம் அம்மா உணவகத்திற்கு காய்கறிகள் பெற்றுக்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.7**

நெல்லியாளம் நகராட்சிக்கு உட்பட்ட பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்து வரும் கிணறுகள் குடிநீர் விநியோகம் செய்ய அவசரம், அவசியம் கருதி சுத்தம் செய்யும் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. பந்தலூர் VAO அலுவலகம் குடிநீர் திட்டம் கிணறு சுத்தம் செய்தல்
2. தேவாலா கைலாசம் காலணி குடிநீர் திட்டம் கிணறு சுத்தம் செய்தல்
3. அண்ணாநகர் குடிநீர் திட்டம்

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.8**

நெல்லியாளம் நகராட்சியின் பொறியியல் பிரிவில் பணிபுரியும் குடிநீர் விநியோக உதவியாளர்கள் மற்றும் மின்பணி உதவியாளருக்கு மழைகோட்டு மற்றும் கம்பூட் ஆகியவை வாங்கி வழங்க உத்தேச செலவினம் ரூ.50000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.9**

நெல்லியாளம் நகராட்சியின் மூலம் கோவை தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு 2020–2021 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய நிர்வாக பங்குத்தொகை ரூ.20000/– செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.10

2019–2020ம் ஆண்டு சிறப்பு பகுதி மேம்பாடு திட்டம் கீழ் தேவாலா அட்டி வாழமூலாவில் நடைபாலம் அமைத்தல் பணிக்கு ரூ.10.00 இலட்சத்திற்கு 30.7.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும்

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1. | திரு. செய்தலவி | 0.05 % குறைவு |
| 2. | திரு.ரஹமத்துள்ளா | 1.38 % அதிகம் |
| 3. | திரு.நசுரூதீன் | 0.36 % அதிகம் |

அலுவலக குறிப்பு

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் 0.05 % குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.செய்தலவி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

பொருள் எண்.11

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகத்திற்கு 110 மின் மோட்டார்கள் 10 டீசல் எஞ்சின்கள் மொத்தம் 120 குடிநீர் ஆதாரங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பம்பு அறைகளிலுள்ள மின்மோட்டார்கள் மற்றும் டீசல் எஞ்சின்கள் இயக்க நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் அந்தந்த பகுதிகளில் உள்ள நபர்களை வைத்து மின் மோட்டார்கள் இயக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பம்பு இயக்கும் பணிக்கான ஒப்பந்தக்காலம் 31/07/2020 உடன் முடிவடைகிறது. மேலும் 01/08/2020 முதல் 31/12/2020 முடிய மூன்று மாத காலங்களுக்கு திரு.தேவேந்திரன் என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின்படி நீட்டிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதி வழங்கலாம்.

(கையொப்பம்) 31/7/2020
தனி அலுவலர்
நெல்லியாளம் நகராட்சி